RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s846

OPEN ACCESS

# அகவல் மகளே அகவன் மகளே

அ. கார்முகிலன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மணல்மேடு-609202, தமிழ்நாடு, இந்தியா

# Akaval Makale Akavan Makale

A. Karmugilan [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science College, Manalmedu-609202, Tamil Nadu, India

* Corresponding Author: akmukilan69@gmail.com

Received: 17-05-2021
Revised: 05-06-2022
Accepted: 11-06-2022
Published: 09-08-2022

Check for updates

**ABSTRACT**

Among the four types of spheres that can be found in the inner world of life is the first stage, where the Talaivanum and talaiviyum gather together. Apart from these, the place will be divided into Pankarkootam and Pankiyet Kootam. Alar and Ambal will be the subject of the two people's affair. It is at this time that the role of the friend becomes very necessary for the leader. She will be an opportunity for the friend to reveal the truth of the Agaval daughter who is called by the foster mother during the time when the friend is almsgiving for the sake of the leader. Katuvichi's cues are more desirable to a friend than a leader. The aim is to know how this agaval daughter who tells the story was called in the ancient rituals and how her action before the madness becomes important.

**Keywords:** Pankarkootam, Pankiyet Kootam, Akaval Makale

## முன்னுரை

அகத்திணை களவியல் வாழ்வில் இடம் பெறக்கூடிய நான்கு வகை கைகோளில் தலைவனும், தலைவியும் இயைந்து கூடும் கூட்டம் முதல் நிலை எனப்படும். இவையன்றி இடம் தலைப்பட்டு பாங்கற்கூட்டம், பாங்கியற் கூட்டமென கூடி திளைப்பர். அலரும் அம்பலும் ஆகி இருவர் களவும் ஊறறிய இற்செறிப்பிற்கு தலைவி ஆளாக்கப்படுவாள். இந்த வேளையில்தான் தோழியின் பங்கு தலைவிக்கு மிக அவசியமாக அமையும். தலைவியின் பொருட்டு தோழி அறத்தொடு நிற்கும் காலத்தில் செவிலியால் அழைக்கப்படும் அகவல் மகள் உண்மையை வெளிப்படுத்த தோழிக்கு அவள் ஒரு வாய்ப்பாக அமைவாள். கட்டுவிச்சியின் குறி வார்த்தைகள் தலைவியை விட தோழிக்கு மிகவும் விரும்பத்தக்கதாக அமையும். குறி கூறும் இந்த அகவல் மகள் பண்டை வழக்காற்றில் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டாள் என்பதையும் வெறியாட்டிற்கு முன் இவளது செயல் எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகிறது என்பதையும் அறிவதே நம் நோக்கமாகும்.

தலைவனும் தலைவியும் எவ்வித முயற்சியும் இன்றி நல்வினையின் காரணமாக எதிர்ப்பட்டு கூடுவர். சான்றோர் இதனை அன்புடைக்காமம் என்று கூறுவர். இன்பமும் பொருளும் அறனும் என்று சொல்லப்பட்ட அன்பொடு புணர்ந்த நடுவன் ஐந்திணையில் கொடுப்பவரும் அடுப்பவரும் இன்றி நடைபெறும் இவ்வொழுக்கம் அறம் எனச் சான்றோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். ஐந்திணைகளில் நிகழுகின்ற இக்களவொழுக்கம் இயற்கையாக நிகழ்வதால் ஊறறியக் கூடும் கற்பொழுக்கத்திற்கு முன்னதாகப் பேசப்படுகின்றது. தலைவன் தலைவி இருவரிடமும் அன்பு ஒத்து நடைபெறுகின்ற புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஒழுக்கங்கள் ஐந்து நிலங்களிலும் களவு, கற்பு

என்ற இருநிலைகளில் நடைபெறுகின்றது. இதில் களவு வாழ்வு இயற்கைப் புணர்ச்சியால் இடம் தலைப்பட்டு பாங்கன் மற்றும் தோழி உதவியுடன் தொடர்ந்து நடைபெறுகின்றது. இதனை,

"மறை வெளிப்படுதலுந் தமரிற்பெறுதலும்

இவை முதலாகிய இயனெறி திரியாது

மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்

பிரிவொடு புணர்ந்தது கற்பெனப்படுமே"

என்னும் நூற்பாவால் அறியலாம். களவு ஒழுக்கத்திற்கு இடையூறாக நிலவு வெளிப்படுதல், காவலர் கடுகுதல், தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை ஆகியவை காரணங்களாக அமைந்துவிடும் (Ilampuranar, 2005). தலைவியின் களவு ஒழுக்கத்தை தலைவி மாட்டு தோன்றும் நாற்றம், தோற்றம் காரணமாக தோழி எளிதில் அறிந்து கொள்வாள்.

## உண்டியிற்குறைதலும் உடம்பு நனி சுருங்கலும்

தலைவனது பிரிவால் தலைவியின் அழகை பசலை நோய் தொற்றி அவளை இயல்பு இல்லாதவளாக மாற்றிவிடும். நல்ல பசுவின் இனிய பாலும் வேம்பு காயாக தலைவிக்கு கசக்கும். தலைவனது வருகைக்காக அவளது கண்கள் காத்திருக்கும். இரவும் பகலும் உறக்கம் கொள்ளாமல் பிரிவினால் தலைவி வாடியிருப்பாள். அவ்வேளையில் நெஞ்சழிந்த தலைவி,

"காமந் தாங்குமதி யென்போர் தாமஃ

தறியலர் கொல்லோ வளைமது கையர் கொல்

யாமெங் காதலர்க் காணே மாயிற்

செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்

கல்பொரு சிறுநுரை போல

மெல்ல மெல்ல வில்லா குதுமே"

என்று ஆற்றுதலுக்கு வழியில்லா நிலையில் பாறையில் படும் நுரை தானே கரைதலைப் போன்று தானும் இல்லாமல் போய் விடுவோமோ என அஞ்சிய அவளுக்கு ஊண், உறக்கம் இல்லாமல் உடல் மெலிந்து அவளது கைவளை நெகிழ்ந்து விழும். தலைவியின் இந்த உடல் மாற்றத்தைக் கண்டு செவிலித் தாயும் நற்றாயும் கவலையில் ஆழ்ந்து விடுவார். இவ்வேளையில் குறிகூறும் அகவல் மகளை நாடுவர் (Swaminatha Iyer, 2009).

## அகவல் மகள் அகவன் மகள்

தலைமகளுக்குக் குற்றம் இல்லாத காமம் சான்ற தலைமகள் கண் நிகழும் மனஎழுச்சி காந்தள் எனப்படும். ஆண்களுக்கு அமைகின்ற மடலேறுதல் நிகழ்வு போல் இந்த காந்தள் பெண்களுக்கு நிகராக அமைந்துவிடும். பெண் என்பதால் மடலேறும் பண்பு அவளுக்கு ஒழிக்கப்பட்டதால் அவளுடைய மன எழுச்சி காந்தளின் பால் வைக்கப்படும்.

ஊரில் ஏற்பட்ட அம்பல், அலர் என அனைவராலும் அறியப்பட்டமையால் தலைவன், தலைவி மாட்டு தொடர்ந்திருந்த உறவு தடைபடும். பகல் மற்றும் இரவுக் குறி வாய்ப்புகள் இல்லாத நிலையில் தலைவியிடம் மெலிபு தோன்றும். இந்த மெலிவிற்குக் காரணம் முருகனோ என தாய் அஞ்சுவாள். வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த தாய் எண்ணுவாள். வெறியாடலுக்கு முன் "கட்டுக்கேட்டல்" என்ற நிகழ்வு நடைபெறும். கட்டுக்கேட்டலுக்கு உரியவள் அகவல்மகளிர் ஆவள். அகவல்மகள் முதுவாய்ப் பெண்டிர், செம்முது பெண்டிர், அறியுநர், கட்டுவிச்சி என பலப் பெயர்களில் அழைக்கப்படுவாள். தலைவனின் அகன்ற மார்பை தீண்டாததால் தலைவிக்கு வருத்தம் வந்ததை

அறியாது முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்த முதுவாய்ப் பெண்டிர் கூறுவள். (அகம், பா. 22 ஆசிரியர் குழு, 2004) பண்டைட காலத்தில் மகளிர் தினைப்புனக் காவலுக்கு செல்லும் பண்பினைக் கொண்டிருந்தனர். சிறுகிளி கடிந்த தலைவி தலைவனை நேர்கொண்டமையால் பிறர் அறியா வண்ணம் களவு வாழ்வு கொள்கின்றாள். இல்லத்தோரால் இற்செறிப்பு கொள்ளும்போது நோய்க்கு ஆளாகின்ற தலைவிக்கு கட்டுகேட்பதற்காக செம்முதுபெண்டிர் அழைக்கப்பட்டு இல்லத்தார் குறிகேட்கின்றனர். முறத்தில் பிடி நெல்லை வைத்து எதிரில் தலைவியை நிறுத்தி தெய்வத்தை அழைப்பர். பிடிநெல்லை நான்கு நான்காக எண்ணிய பின் மீதஉள்ள நெல் இரட்டைபடையில் வந்தால் வேறு ஒன்றால் வந்தநோய் எனவும் ஒற்றைப்படையில் வந்தால் முருகன் தந்த நோய் எனவும் செம்முது பெண்டிர் கூறுவர். தலைவியின் அழகுகெட்டு தோள்கள் மெலிந்தன. தோழி அறத்தொடு நிற்க வேண்டிய காலம் சரியாக வந்தது. தோழி செவிலித் தாய்க்கு முறையாக தலைவியின் களவு ஒழுக்கத்தைக் கூற துணிவாள். துணியும் அவள்,

“எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்

கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு

உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇய

ஏழு வகைய என்மனார் புலவர்”

என்கின்ற வகையில் எடுத்துரைப்பாள் (Ilampuranar, 2005).

பண்டைய மக்களிடம் ஏற்படக்கூடிய சிறுசிறு இன்னல்களுக்கும் நோய்களுக்கும் பலன் பெற வேண்டி இறைவனை நினைத்து கட்டு வைத்து அறிதல், கழங்குகளை எண்ணி அறிதல், தெய்வங்களுக்கு நேர்ந்து கொண்டு பரவுக் கடன் கொடுத்தல் ஆகிய வழக்கங்கள் இருந்ததை அறிய முடிகின்றது. கட்டு முறத்தில் நெல்லை பரப்பி குறிபார்த்துக் கூறுபவள் கட்டுவிச்சி என அழைக்கப்பட்டாள்.

கட்டுவிச்சி கழற்சிக்காய்களைக் கொண்டும் அதனை பகுத்தும் பிhpத்தும் எண்ணும் வகையில் ஒற்றைப்படை, இரட்டைப்படை என அறிந்து குறி கூறுவாள். இந்த குறி கூறும் மரபு பண்டைய வழக்காற்றில் மரபுவழி தொடர்ந்து வருவதாகும்.

அகவல்மகள் என்பவள் தெய்வங்களை வேண்டி பாடுதலைச் செய்யும் கட்டுவிச்சியேயாவாள். பெரும்பாலும் இவள் குறிஞ்சி நிலப் பெண்ணாகவே இருப்பாள். எனவே அவளுக்கு பாடுதல் என்பது இயல்பான ஒன்றாகும். குன்றம் என்கின்ற முதல் பொருள் கட்டுவிச்சியால் புகழ்ந்து பாடப்படும் பொழுது தலைவனொடு புணர்ந்த நினைவுகள் நனவோடையாக தலைவிக்கு நினைவுக்கு வரும். இதனை,

“அகவல் மகளே அகவன் மகளே

மனவு கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்

அகவன் மகளே பாடுக பாட்டே

இன்னும் பாடுக பாட்டே, அவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே”

என்னும் பாடல் வாரிகளால் அறியலாம் (Swaminatha Iyer, 2009). அகவல்மகள் ஒவ்வொரு குன்றாகப் பாடிவருகின்றாள். தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள உறவை எப்படியாவது அறிவிக்க வேண்டுமென தோழி விரும்புவாள். மலைகளை வாழ்த்திப் பாடும் அகவல்மகளை அணுகிய தோழி, தலைவிக்கு விரும்பத்தக்க தலைவனின் குன்றத்தை மேலும் ஒருமுறை பாடும்படி கேட்டுக்கொள்கின்றாள். தோழிக்கு அந்த மலைபாடும் போது மட்டும் அத்துணை அன்பிருந்த காரணத்தை அறியும்போது தலைவன் மாட்டு உள்ள உறவு அனைவராலும் அறியப்படுகின்றது. குறுந்தொகைப் பாடலில் மூன்று முறை தோழியால் அகவல்மகள் அழைக்கப்படுகின்றாள். மலையின

பெண்ணான நரைமூதாட்டி பல மலை வளங்களைக் கண்டவள். இவள் பொய்வல் பெண்டிர் என அழைக்கப்பட்டாலும் வேலனை முதன்மைப்படுத்திக் கூறுவதால் தலைவியின் நோய்க்குக் காரணமானவன் மலைநாட்டு தலைவன் என்பது உள்பொருளாகக் கொண்டு கட்டுக் கூறுபவள் (Pulavar kulu, 1997).

குறிஞ்சி நிலத்தில் மலைவளம் பாடுதலும் பாடப்படுதலும் இயல்பான ஒன்றாகும். தலைவி மீது கொண்ட அன்பால் இரவில் வரும் தலைவனை மறுத்து மறுநாள் தினைக்காவலின் போது உமது மலைவளம் புகழ்ந்து பாடி நானும் தலைவியும் வருவோம் எனத் தோழி கூறும் கூற்றில் தலைவனது மலைவளம் பாடப்படுகின்றது. மேலும் முற்றத்தில் உள்ள பலாவைத் தீண்டிய மந்தியைக் கவனியாது மலையின கொடிச்சி தன் தந்தையின் மலை வளத்தை எண்ணி பாடிக் கொண்டே ஐவன நெல் குத்தும் காட்சி மலைவள மேன்மையை காட்டுகிறது. ஆய்அண்டிரனது மலைவளத்தை பாடி வரும் புலவர்களுக்கு இன்முகத்துடன் யானைகளை அண்டிரன் கொடையாக வழங்குவதையும் காணமுடிகின்றது (Pulavar kulu, 2007). இப்படி இயற்கையில் உள்ள மலையின் வளத்தைப் பாடுதல் குறிஞ்சி நில மக்களின் பண்பாடாகக் காண முடிகின்றது (Puliyur kesigan, 1971).

## வெண்கடை சிறுகோல் அகவல் மகளிர்

குறிகூறும் அகவல் மகளிர் பெரிய மூங்கில்களைக் கொண்ட குறுங்காடுகளில் தேர்ந்து ஆய்ந்த சிறு கணுக்கள் கொண்ட நுண்ணிய மூங்கிலை வெட்டி நுண்தோலை பூணிட்டு தயார் செய்து வைத்திருப்பாகள். இந்த நுண்ணிய கோல் வெண்கடை சிறுகோல் என அழைக்கப்பட்டது. இது வெண்ணிய நுனி பூண்கொண்டு கட்டப்பட்டது என்பதனை,

"---- ----- ----- --- பின்றை

வெண்கடைச்சிறு கோலகவன் மகளிர்"

என்னும் பாடல் வரிகளால் அறியலாம் (Swaminatha Iyer, 2009). மேலும் அகவல் மகள் போல் அகவுநர் என்னும் ஆண்களும் உண்டு. இவர்கள் நுண்ணிய கோலைக் கொண்டு போர்க்களத்தை வாழ்த்தும் பாணர்களாக இருந்தனர். நுண்கோல் என்பது பிறப்பினை உணர்த்தும் கோல் என்றும் அறியப்படுகின்றது. இன்றைய நாளில் சோதிடம் கணிப்பது போன்றது எனலாம். இதனை,

"------- ----- ---- நுண்கோல் கொண்டு களம் வாழ்த்தும்

அகவலன்

என்னும் வரிகளால் அறியலாம் (Pulavar kulu, 2007).

அகவுநர்களில் சிலர் அரண்மனை வாசலில் வைகறை வேளையில் விறலியோடு வந்து பிறப்பங்கோல் கொண்டு பாடும் பண்புடை பாணர்களாக வாழ்ந்துள்ளனர். புற மரபில் போர்க்களம் குறித்தும், வெற்றி குறித்தும் முழுக்க முழுக்க மன்னனைப் புகழும் பண்பினராக அகவுநர் செயல்பாடு இருந்துள்ளதை காண முடிகின்றது.

## முடிவுரை

பண்டை மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்தியம்பும் தரவாக அமைந்துள்ளவை சங்க இலக்கியங்கள் ஆகும். அகம், புறம் என வாழ்ந்த தமிழ் இனத்தில் அக ஒழுக்கங்களாக களவும், கற்பும் அமைந்துள்ளன. அகவாழ்வில் களவு ஒழுக்கம் முதன்மைப் பெற்றது மட்டுமன்றி இயற்கையானதாகவும் அமைந்துள்ளது. அகவாழ்வு துயரில் பெண் மிகவும் ஆற்றுதலுக்குரியவளாகக் காணப்படுகின்றாள். தலைவனோடு அவனைச் சார்ந்து வாழ்வதற்கு குறிபார்க்கும் நம்பிக்கை பண்பாட்டின் அடிப்படையில் அவளுக்கு அவசியமாகின்றது. குறிகூறும் அகவல் மகள் பண்டைய மக்களின் நம்பிக்கைக்கு உரியவளாக காணப்படுகின்றாள். பண்டைய மக்களின் அகவாழ்வியலுக்கு

அகவல் மகள் அமைவது போல் புற வாழ்வியலுக்கு அகவுநர் அடிப்படையாக அமைகின்றனர் என்பதையும் அறிய முடிகின்றது.

## References

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, 1st Edition, Saradha Pathippagam, Chennai, Tamil Nadu, India.

Pulavar kulu, (1997) Agananooru, Paari Nilaiyam, Chennai, India.

Pulavar kulu, (2000) Natrinnai, Paari Nilaiyam, Chennai, India.

Pulavar kulu, (2007) Pathitrupathu, New Century Book House, Chennai, India.

Puliyur kesigan, (1971) Purananuru, Pari Nilaiyam, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve., (2009) Kurunthogai moolamum uraiyum, U.V.SA., Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License